வாக்குமூலம்

குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 272/2013

வழக்கு சாட்சி.அ.சா.4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | திரு. கே. நாகராஜன், காவல் உதவி ஆய்வாளர் | ஜாதி: | |
| தந்தை பெயர்: | காளிமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது : | 56/2023 |

(எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது )

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 16.05.2023**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

நான் மீமிசல் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். வழக்கு கோப்புகளின் அடிப்படையில் எனக்கு வழக்குகளை பற்றி விவரங்கள் தெரியும். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த காவல் ஆய்வாளர் திரு.சுப்பையா அவர்கள் பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டபடியால், கோப்புகளை நான் கையாளுவதின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 22.07.2013 காலை 9.30 மணியளிவல் நிலைய பொறுப்பில் உதவி ஆய்வாளர் திரு. ராஜு அவர்கள் பொறுப்பில் இருந்தபோது ஞானசெல்வம் மகன் ஜூடு நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் அடிப்படையில் நிலைய குற்ற எண்.73/2013 பதிவு செய்து இ.த.ச.பிரிவுகள் 279, 337 ஆகிய பிரிவுகளின்கீழ் முதல் தகவல் அறிக்கையானது பதிவு செய்யப்பட்டது. மேறப்டி முதல் தகவல் அறிக்கையானது அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் திரு. சுப்பையா அவர்கள் சம்பவயிடம் சென்று சாட்சிகள் ஷேக் அலாவுதீன், சாகுல்உறமீது ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடமானது தயார் செய்யப்பட்டது. மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடமானது அ.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த சகாயகிளாரா இறந்துவிட்டதாக 22.07.2013 அன்று 11.50 மணிக்கு தகவல் கிடைத்ததன் பேரில் சட்டப்பிரிவானது இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் பிரிவு மாற்றம் செய்யப்பட்டது. மேலும் விபத்தில் காயமுற்ற சாம்சன், அஜய், டிவைனா ஆகியோர்களது

காயச்சான்றிதழ்களானது கொடுங்காயம் என வழங்கப்பட்டதால், மேற்படி காயத்தினை பொறுத்தும் பிரிவு மாற்றம் செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பிரிவு மாற்ற அறிக்கையானது அ.சாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மதுரை ராஜாஜிமருத்துவமனை சவகிடங்கு சென்று இறந்த சகாயகிளாராவை பொறுத்து பஞ்சாயத்தார்களுக்கு தகவல் தெரிவித்து காலை 15.00 மணிமுதல் 16.15 வரை பிரேத விசாரணை அறிக்கையினை தயார் செய்யப்பட்டது. மேற்படி பிரேத விசாரணை அறிக்கையானது அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறப்பின் காரணம் அறிவதற்காக சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராமமூர்த்தி மூலமாக பிரேத பரிசோதனை செய்வதற்கு மதுரை பேராசியர் மருத்துவத்துறை மருத்துவர் திரு. கார்த்திக் என்பவருக்கு வேண்டுகோள் கடிதமானது கொடுக்கப்பட்டது. பின்னர் ஜூடு, சாம்சன், அஜய், டிவைனா, காந்தி, ஷேக் அலாவுதீன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலமானது பதிவு செய்யப்பட்டது. விபத்தினை ஏற்படுத்திய எதிரி தானாக முன் வந்து, நிலையம் ஆஜராகி, நிலைய பிணையம் பெற்று இந்நாள் வரை பிணையில் இருந்து வருகிறார். விபத்திற்கு உட்பட்ட TN 72 AL 3781 LMV காரினை வாகன ஆய்விற்கு உட்படுத்தி மேற்படி வாகன மோட்டார் ஆய்வறிக்கையானது பெறப்பட்டது. மேற்படி மோட்டார் வாகன சான்றானது அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மோட்டார் வாகன ஆய்வாளரான திரு. நெடுஞ்செழியபாண்டியன் அவர்களை வாக்குமூலம் பெற்று தனியாக பதிவு செய்யப்பட்டது. பின்னர் விபத்தில் காயமுற்ற சாம்சன், அஜய், டிவைனா ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்த மதுரை ப்ரித்தி மருத்துவமனை மருத்துவர் திரு. சிதம்பரம் அவர்களை விசாரணை செய்தும் அவர்களிடம் வாக்குமூலம் பெற்று அவர் சிகிச்சை அளித்த நபர்களின் விபத்து பதிவேடு, காயச்சான்றிதழ்களை பெறப்பட்டது. டிவைனாவின் காயச்சான்றிதழானது அ.சாஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அஜயின் காயச்சான்றிதழானது அ.சாஆ 9 ஆகவும், சாம்சனின் காயச்சான்றிதழ் அசாஆ 10 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் மதுரை அரசு மருத்துவக்கல்லூரி பேராசிரியரான திரு.கார்த்திக் அவர்களிடமிருந்து இறந்த சகாயகிளாராவின் பிரேத பரிசோதனை அறிக்கையினை பெறப்பட்டது. மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கையானது அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராமமூர்த்தி, உதவி ஆய்வாளர் ராஜு ஆகியோர்களை விசாரணை செய்து தனிதனியாக வாக்குமூலம் பெறப்பட்டது. பின்னர் இவ்வழக்கின் விசாரணையை முடித்து குற்ற தன்மைக்கேற்ப இ.த.ச பிரிவுகள் 279, 338( 3 எண்ணிக்கைகள்), 304(A) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கையானது 10.10.2013 அன்று தாக்கல் செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 அளித்த பொய்யான புகாரினை முறையாக விசாரணை செய்யாமல், எதிரி மீது முதல் தகவல் அறிக்கையும்,குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.